**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 44/மா/2024**

**நாள்: 19.02.2025**

திரு. S. கமருதீன்
காஞ்சிபுரம் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
காஞ்சிபுரம் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

காஞ்சிபுரம், பங்காரு ஏசப்பன் தெரு, எண் 18/35 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. கமருதீன் என்பவரின் 31.01.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2024 அன்று பெறப்பட்டு 44/மா/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

காஞ்சிபுரம், பங்காரு ஏசப்பன் தெரு, எண் 18/35 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. கமருதீன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

"கொரோனா பெருந்தொற்றின் போது காஞ்சிபுரம் மாநகராட்சியின் கொரோனா மூலம் உற்பத்தியான திடக்கழிவுகளை நத்தப்பேட்டையில் உள்ள குப்பை கிடங்கிற்கு கொண்டு சென்று சேர்க்கும் பணிக்கு காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரின் செயல்முறை உத்தரவின் பேரில் நான்கு சிறு ரக வாகனங்களை, ஓட்டுநர், டீசல் மற்றும் பராமரிப்பு என ஒரு வாகனத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் அடிப்படையில் கீழ்க்கண்ட பதிவெண் கொண்ட நான்கு TATA ACE வாகனங்கள் காஞ்சிபுரம் நகராட்சி பணிக்கு ஒப்படைத்தேன்:

| வ. எண். | வாகன பதிவு எண். | வாகன வகைப்பாடு |
|---|---|---|
| 1 | TN 21 AE 1251 | TATA ACE |
| 2 | TN 18 C 5380 | TATA ACE |
| 3 | TN 01 AJ 3682 | TATA ACE |
| 4 | TN 21 BK 5676 | TATA ACE |

வாகனம் இயங்கிய போது அதனை மேலாண்மை செய்து மேற்பார்வையிட்ட நகராட்சி சுகாதாரப் பிரிவு அலுவலர்களுக்கு எமது நிறுவனம் நான்கு வாகனங்கள் விநியோகம் செய்ததை பயன்படுத்திக் கொண்டார்கள். அதனடிப்படையிலேயே நான்கு வாகனங்களுக்குமாக பட்டியல் தொகைக்கு பரிந்துரை செய்துள்ளார்கள். எமது நிறுவனம் அளித்த பட்டியல் தொகை பெறுவதற்காக, பட்டியலில் மேற்குறிப்பிட்டுள்ள வாகனங்களில் வரிசை எண்.3 மற்றும் 4–ன் பதிவெண்களை பதிவிடும் போது வரிசை எண்.3–க்கான பதிவெண்ணில் 01–க்கு பதிலாக 21 எனவும், வரிசை எண்.4–க்கான பதிவெண்ணில் 76–க்கு பதிலாக 26 எனவும் தவறுதலாக பதிவிட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது. அவைகள் Numerical Error ஆகும். அவை தட்டச்சு செய்தவரால் தவறாக பதிவிடப்பட்டுள்ளது. அத்தவறு அறிந்ததும் பயன்படுத்தப்பட்ட வாகன பதிவு புத்தகத்துடன் 22.03.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம் ஆணையர் அவர்களுக்கு எனது பதிலினை தெரிவித்தேன். அதன் பேரில் உடன் நிகழ் தணிக்கை சீட்டு எண்.162/2020–21 தடையாக குறிப்பிட்டதன் பேரில், மாநகராட்சி ஆணையர் அவர்களால் அறிவிப்பு வழங்கப்பட்டது. அவ்வறிவிப்பின் பேரில் தணிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பணிக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்களில் பதிவு புத்தகங்கள் மற்றும் அதன் நகல்கள், ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றோடு உரிய விளக்கம் ஆணையருக்கு அளிக்கப்பட்டது. ஆணையர் எனது விளக்கத்தை ஏற்றுக் கொள்ளாமல் இறுதி அறிவிப்பு வழங்கினார். அதற்கு உரிய பதில் என்னால் அளிக்கப்பட்ட பின்னரும் எனது விளக்கத்தை பாராமல் என்னை எவ்வித முகாந்திரமோ விசாரணையோ செய்யாமல் என்னை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்க்க உத்திரவிட்டார். மேலும் எனது ஒப்பந்த பதிவு புதுப்பிக்க 17.05.2022–ல் என்னால் அளிக்கப்பட்ட விண்ணப்பத்தை காலம் தாழ்த்தி ஏற்கனவே உத்திரவிடப்பட்ட 28.06.2022 தேதியில் ஒப்பந்த பதிவை புதுப்பிக்க இயலாது என கடிதம் மூலம் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எனது மன உளைச்சல் காரணமாக மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு புகார் மனு அளித்தேன். அப்புகார் மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என எனக்கு இதுவரை தெரியவில்லை. ஆனால் 24.09.2022 அன்று என்னை விசாரணை செய்தார்கள். அதன் நடவடிக்கை என்ன என்பது எனக்கு இதுவரைக்கும் தெரியவில்லை. எனவே, மாநகராட்சியால் வழங்கப்படாமல் வைத்துள்ள ரூ.19,43,400/–ஐ எனக்கு வழங்குவதற்கு உரிய உத்திரவை பிறப்பிக்குமாறு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாமில் மாண்புமிகு சிறு, குறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களிடம் 07.11.2023 அன்று விண்ணப்பம் செய்தேன். அதன்பேரில், காஞ்சிபுரம் மாநகராட்சியால் எனக்கு வழங்க வேண்டிய தொகைக்கான கோப்பானது துணை கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காஞ்சிபுரம் அவர்களிடம் விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அவை வந்த பிறகு எனக்கு சேர வேண்டிய தொகை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என காஞ்சிரம் மாநகராட்சியால் எனக்கு தெரிவிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாநகராட்சியால் கொரோனா பெருந்தொற்று காலத்தில் பொதுமக்களுக்கு சேவை செய்யும் அடிப்படையில் எவ்வித ஆதாயமும் இன்றி, வாகன வாடகை, ஓட்டுர் கூலி மற்றும் வாகனத்திற்கான டீசல் உட்பட நாள் ஒன்றுக்கு ரூ2,050/– என்னும் விலை விகிதத்தில் நான் மாநகராட்சிக்கு செய்த சேவையை எண்ணிப்பார்க்காமல் உள்ளாட்சி நிதி தணிக்கையில் எழுப்பப்பட்ட வாகன பதிவெண் குறித்த விளக்கம் மற்றும் பயன்படுத்தப்பட்ட வாகன பதிவு விவரம் அளித்த பின்னும், அப்போது இருந்த ஆணையர் திரு.நாராயணன் (தற்போது தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையர்) அவர்கள் விருப்பத்திற்கு ஒத்துப்போகாததால் எனக்கு 3 ஆண்டுகளாக சேர வேண்டிய தொகை கிடைக்காமல் இருப்பதுடன் அவர் என்மீது கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக பணி இடமாற்றம் உத்தரவு பெறப்பட்ட பின்னர், அவர் காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணிபுரிந்த இறுதி பணி நாளில், என்னை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்த்து எனது ஒப்பந்த பதிவையும் ரத்து செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனையும் காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலர் அவர்களுக்கு புகார் அளித்துள்ளேன்.

எனது வாழ்வாதாரத்தை, திரு. நாராயணன் (முன்னாள் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர்) அவர்களின் தவறான முடிவினால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, என் மீது தவறாக எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ரத்து செய்யவும், எனக்கு சேர வேண்டிய தொகையினை மாநகராட்சி வழங்கவும், உரிய விசாரணை செய்து என் வாழ்வாதாரத்தை மீட்டுத் தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.07.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது 22.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

> “காஞ்சிபுரம் மாநகராட்சியில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் சேகரமாகும் திடக்கழிவுகளை நகரிலிருந்து குப்பை சேகரிப்பு கிடங்கிற்கு உடனுக்குடன் கொண்டு செல்ல போதிய வாகனம் இல்லாத நிலையில், ஒப்பந்த அடிப்படையில் நான்கு சிறிய ரக வாகனங்கள், திருவாளர். SAFFARI Associates (S. கமருதீன்) என்பவருக்கு உத்திரவு அளிக்கப்பட்டதன் பேரில் வாகன வாடகை, ஓட்டுநர் கூலி மற்றும் வாகனம் இயக்குவதற்கான டீசல் உட்பட நாள் ஒன்றுக்கு ரூ.2050/– என வாடகை அடிப்படையில் நான்கு வாகனங்கள் விநியோகம் செய்ய உத்தரவு அளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. வாகனம் வாடகை அடிப்படையில் விநியோகம் செய்த ஒப்பந்த நிறுவனத்திற்கு காஞ்சிபுரம் மாநகராட்சியால் 06.11.2020, 08.03.2021, 23.07.2021, 27.10.2021 (ம) 11.01.2022 ஆகிய தேதிகளில் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.
>
> மேற்படி பட்டியல் தொகை குறித்து காஞ்சிபுரம் மாநகராட்சி உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களால் ஆய்வு செய்ததில் பட்டியலில் சேர்க்கப்பட்ட இரண்டு வாகனங்களின் பதிவு எண் தவறாக இருப்பதாக குறிப்பிடப்பட்டு அதற்கான இழப்பீட்டு தொகையாக ரூ.8,85,650/– ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்றும் அல்லது வாகனத்திற்கான பதிவு புத்தகம் (RC Book), காப்பீடு விவரம் ஆகியவற்றை தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என தணிக்கை பத்தியில் சுட்டி காட்டப்பட்டது. அதன்படி காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களால் முதல் மற்றும் இறுதி அறிவிப்பு ஒப்பந்த நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது. இந்நிலையில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் ஆணையர் அவர்களின் அலுவலக குறிப்பில் வாகனம் விநியோகம் செய்த ஒப்பந்த நிறுவன உரிமையாளர் திரு. S. கமருதீன் அவர்களின் காஞ்சிபுரம் மாநகராட்சி ஒப்பந்ததாரர் பதிவினை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்க்க அறிவுறுத்தியதன்பேரில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. S. கமருதீன் அவர்களை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்த்து உத்திரவிடப்பட்டது.
>
> ஒப்பந்ததாரர் திரு. S. கமருதீன் அவர்கள் தம்மை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்த்ததை நீக்கம் செய்யுமாறும், தனக்கு வாகனம் விநியோகம் செய்த வகையில் மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டிய தொகையினை வழங்குமாறு மாநகராட்சிக்கு விண்ணப்பம் செய்தார். மேலும், மாண்புமிகு சிறு மற்றும் குறு தொழில் அமைச்சர் அவர்களிடம் மக்கள் குறை தீர்ப்பு நாள் விண்ணப்பமாக மனு அளித்துள்ளார். தவிர, திரு. S. கமருதீன் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை கண்காணிப்பாளருக்கு காஞ்சிபுரம் மாநகராட்சி தமக்கு தொகை வழங்கப்படாமல் காலம் தாழ்த்துவதை தவிர்க்கவும், தம்மை விதிகளுக்கு முரணாக கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது குறித்து புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில், துணை கண்காணிப்பாளர், ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை, காஞ்சிபுரம் அவர்களால்

தணிக்கை தடை மற்றும் திரு. S. கமருதீன் அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து கோப்புகளையும் ஆய்வுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டதிற்கிணங்க, மேற்படி நபர் சம்பந்தப்பட்ட அனைத்து கோப்புகளும் காவல் துறை துணை கண்காணிப்பாளர், ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை, காஞ்சிபுரம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் தொகை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்ட கடிதத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்க இயலாதவாறு கோப்புகள் ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை அவர்களிடம் உள்ளது.

மேற்படி கோப்புகள் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் தணிக்கை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்த நிறுவனத்திற்கு உரிய தொகை வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. தொகை விடுவிக்கக்கூடாது என்று மாநகராட்சியால் எவ்வித காலதாமதமும் ஏற்படுத்தப்படவில்லை. கோப்புகள் வேறு துறையிடம் (ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை) உள்ள நிலையில் காஞ்சிபுரம் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலவில்லை என்பதனை மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது"

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 24.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. S. கமருதீன் என்பவர் 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"கொரோனா பெருந்தொற்றின் போது காஞ்சிபுரம் மாநகராட்சியின் கொரோனா மூலம் உற்பத்தியான திடக்கழிவுகளை நத்தப்பேட்டையில் உள்ள குப்பை கிடங்கிற்கு கொண்டு சென்று சேர்க்கும் பணிக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின் பேரில் நான்கு சிறு ரக வாகனங்களை, ஓட்டுநர், டீசல் மற்றும் பராமரிப்பு என ஒரு வாகனத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 2050/– அடிப்படையில் கீழ்கண்ட பதிவெண் கொண்ட நான்கு TATA ACE வாகனங்கள் காஞ்சிபுரம் மாநகராட்சி பணிக்கு ஒப்படைத்தேன்.

| வ. எண். | வாகன பதிவு எண். | வாகன வகைப்பாடு |
|---|---|---|
| 1. | TN 21 AE 1251 | TATA ACE |
| 2. | TN 18C 5380 | TATA ACE |
| 3. | TN01 AJ 3682 | TATA ACE |
| 4. | TN 21BK 5676 | TATA ACE |

வாகனம் இயங்கியபோது அதனை மேலாண்மை செய்து மேற்பார்வையிட நகராட்சி சுகாதாரப்பிரிவு அலுவலர்களுக்கு எமது நிறுவனம் நான்கு வாகனங்கள் விநியோகம் செய்ததை பயன்படுத்திக் கொண்டார்கள். அதன் அடிப்படையில் நான்கு வாகனங்களுக்கு பட்டியல் தொகைக்கு பரிந்துரை செய்துள்ளார்கள். நாங்கள் அளித்த பட்டியல் தொகை பெறுவதற்கான பட்டியலில் வாகனங்களில் வரிசை எண். 3 மற்றும் 4ன் பதிவெண்களை பதிவிடும்போது வரிசை எண்.3க்கான பதிவெண்ணில் 01க்கு பதிலாக 21 எனவும், வரிசை எண்.4க்கான பதிவெண்ணில் 76க்கு பதிலாக 26 எனவும் தவறுதலாக பதிவிட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது. அவைகள் Numerical Error ஆகும். இத்தவறு அறிந்ததும் அவை தட்டச்சு செய்தவரால் தவறாக பதிவிடப்பட்டுள்ளது என தெரிய வந்தது.

இந்த தவறுதலுக்கான எனது பதிலினை 22.03.2022 ல் ஆணையர் அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்தேன். தணிக்கை சீட்டு எண்.162/2020–21 மாநகராட்சி ஆணையர் அவர்களால் அறிவிப்பு வழங்கப்பட்டது. இதற்கான விளக்கம் உடன் அளித்து கடிதம் வழங்கப்பட்டது. இருப்பினும் ஆணையர் அவர்கள் இறுதி அறிவிப்பு வழங்கினார். எனது விளக்க கடிதம் அனுப்பியும், எவ்வித முகாந்திரமோ விசாரணையோ செய்யாமல் என்னை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்க்க உத்திரவிட்டார். மேலும் எனது ஒப்பந்த பதிவு புதுப்பிக்க 17.05.2022–ல் என்னால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தை காலம் தாழ்த்தி ஏற்கனவே உத்திரவிடப்பட்ட 28.06.2022 தேதியில் ஒப்பந்த பதிவை புதுப்பிக்க இயலாது என கடிதம் அளித்துள்ளார்.

இதனால் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் மனு அளித்தேன். நான் அனுப்பிய புகார் மீது எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாக இதுவரையில் தெரியவில்லை. கடந்த 24.09.2022 அன்று என்னை விசாரணை செய்தார்கள். மாநகராட்சியால் வழங்கப்படாமல் வைத்துள்ள நிலுவைத் தொகை ரூ 19,43,400/– ஐ அளிக்குமாறு தெரிவித்து மாண்புமிகு சிறு குறு (மற்றும்) நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாமில் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் 07.11.2023 அன்று விண்ணப்பம் செய்தேன். எனக்கு வழங்க வேண்டிய தொகைக்கான கோப்பானது துணை கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காஞ்சிபுரம் அவர்களிடம் விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்டது. அவை வந்தபிறகு எனக்கு சேர வேண்டிய தொகை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என காஞ்சிரம் மாநகராட்சியால் எனக்கு தெரிவிக்கப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று பரவி இருந்த காலத்தில் பொதுமக்களுக்கு சேவை செய்யும் அடிப்படையில் எவ்வித ஆதாயமும் இன்றி, வாகன வாடகை, ஓட்டுர் கூலி மற்றும் வாகனத்திற்கான டீசல் உட்பட நாள் ஒன்றுக்கு ரூ2,050/–க்கு நான் மாநகராட்சிக்கு செய்த சேவையை எண்ணிப்பார்க்காமல் உள்ளாட்சி நிதி தணிக்கையில் எழுப்பப்பட்ட வாகன பதிவெண் குறித்த விளக்கம் மற்றும் பயன்படுத்தப்பட்ட வாகன பதிவு விவரம் அளித்த பின்னும், அப்போது இருந்த ஆணையர் திரு.நாராயணன் (தற்போது தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையர்) நான் அவர்கள் விருப்பத்திற்கு ஒத்துப்போகாததால் எனக்கு 3 ஆண்டுகளாக சேர வேண்டிய தொகை கிடைக்க செய்யாமல் அவர் என் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக பணி இடமாற்றம் உத்தரவு பெறப்பட்ட பின்னர் அவரின் காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணிபுரிந்த இறுதி பணி நாளில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவினை பிறப்பிக்கப்பட்டு என்னை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்த்து எனது ஒப்பந்த பதிவையும் ரத்து செய்துள்ளார்.

திரு.நாராயணன் (முன்னாள் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர்) அவர்களின் தவறான முடிவினால் எனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே என் மீது தவறாக எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ரத்து செய்து, எனக்கு சேர வேண்டிய தொகையை மாநகராட்சி வழங்கவும், உரிய விசாரணை மேற்கொண்டு என்னை கருப்பு பட்டியலில் இருந்து நீக்கவும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரர்களான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் துப்புரவு ஆய்வாளர் திரு. V. சீனிவாசன் என்பவர் 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்கள்:

"காஞ்சிபுரம் மாநகராட்சியில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் சேகரமாகும் திடக்கழிவுகளை நகரிலிருந்து குப்பை சேகரிப்பு கிடங்கிற்கு உடனுக்குடன் கொண்டு செல்ல போதிய வாகனம் இல்லாத நிலையில், ஒப்பந்த அடிப்படையில் நான்கு சிறிய ரக வாகனங்கள், திருவாளர். SAFFARI Associates (S. கமருதீன்) என்பவருக்கு உத்திரவு அளிக்கப்பட்டதன் பேரில் வாகன வாடகை, ஓட்டுநர் கூலி மற்றும் வாகனம் இயக்குவதற்கான டீசல் உட்பட நாள் ஒன்றுக்கு ரூ.2050/– என வாடகை அடிப்படையில் நான்கு வாகனங்கள் விநியோகம் செய்ய உத்தரவு அளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. வாகனம் வாடகை அடிப்படையில் விநியோகம் செய்த ஒப்பந்த நிறுவனத்தால் காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு 06.11.2020, 08.03.2021, 23.07.2021, 27.10.2021 (ம) 11.01.2022 ஆகிய தேதிகளில் பட்டியல் பெறப்பட்டு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பட்டியல் தொகை குறித்து காஞ்சிபுரம் மாநகராட்சி உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களால் ஆய்வு செய்ததில் பட்டியலில் சேர்க்கப்பட்ட இரண்டு வாகனங்களின் பதிவு எண் தவறாக இருப்பதாக குறிப்பிடப்பட்டு அதற்கான இழப்பீட்டு தொகையாக ரூ.8,85,650/– ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்றும் அல்லது வாகனத்திற்கான பதிவு புத்தகம் (RC Book), காப்பீடு விவரம் ஆகியவற்றை தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என தணிக்கை பத்தியில் சுட்டி காட்டப்பட்டது. அதன்படி காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களால் முதல் மற்றும் இறுதி அறிவிப்பு ஒப்பந்த நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது. இந்நிலையில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் ஆணையர் அவர்களின் அலுவலக குறிப்பில் வாகனம் விநியோகம் செய்த ஒப்பந்த நிறுவன உரிமையாளர் திரு. S. கமருதீன் அவர்களின் காஞ்சிபுரம் மாநகராட்சி ஒப்பந்ததாரர் பதிவினை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்க்க அறிவுறுத்தியதன்பேரில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. S. கமருதீன் அவர்களை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்த்து உத்திரவிடப்பட்டது.

ஒப்பந்ததாரர் திரு. S. கமருதீன் அவர்கள் தம்மை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்த்ததை நீக்கம் செய்யுமாறும், தனக்கு வாகனம் விநியோகம் செய்த வகையில் மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டிய தொகையினை வழங்குமாறு மாநகராட்சிக்கு விண்ணப்பம் செய்தார். மேலும், மாண்புமிகு சிறு மற்றும் குறு தொழில் அமைச்சர் அவர்களிடம் மக்கள் குறை தீர்ப்பு நாள் விண்ணப்பமாக மனு அளித்துள்ளார்.

தவிர, திரு. S. கமருதீன் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை கண்காணிப்பாளருக்கு காஞ்சிபுரம் மாநகராட்சி தமக்கு தொகை வழங்கப்படாமல் காலம் தாழ்த்துவதை தவிர்க்கவும், தம்மை விதிகளுக்கு முரணாக கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது குறித்தும் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில், துணை கண்காணிப்பாளர், ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை, காஞ்சிபுரம் அவர்களால் தணிக்கை தடை மற்றும் திரு. S. கமருதீன் அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து கோப்புகளையும் ஆய்வுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டதிற்கிணங்க மேற்படி நபர் சம்பந்தப்பட்ட அனைத்து கோப்புகளும் காவல் துறை துணை கண்காணிப்பாளர், ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை, காஞ்சிபுரம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் தொகை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்ட கடிதத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்க இயலாதவாறு கோப்புகள் ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை அவர்களிடம் உள்ளது.

மேற்படி கோப்புகள் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் தணிக்கை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்த நிறுவனத்திற்கு உரிய தொகை வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. தொகை விடுவிக்கக்கூடாது என்று மாநகராட்சியால் எவ்வித காலதாமதமும் ஏற்படுத்தப்படவில்லை. கோப்புகள் வேறு துறையிடம் (ஊழல் மற்றும்

கண்காணிப்பு துறை) உள்ள நிலையில் காஞ்சிபுரம் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலவில்லை.

மேலும் மனுதாரரின் கோப்பினை திரும்ப பெறுவதற்கு காஞ்சிபுரம் ஆணையாளரிடம் கலந்து ஆலோசித்து, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினருக்கு உரிய கடிதம் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மனுதாரரின் கோப்பு திரும்ப பெறப்பட்டு, அக்கோப்பு பரிசீலிக்கப்பட்டு மனுதாரரின் மீது தவறு ஏதும் இல்லை என்று நிரூபணமானால் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது"

7. மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம் மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

8. பெருந்தொற்று காலத்தில் சேகரமாகும் திடக்கழிவுகளை அகற்ற காஞ்சிபுரம் மாநகராட்சி உத்தரவின் பேரில் மேலே பத்தி 5–ல் கூறப்பட்டுள்ள எண்கள் கொண்ட 4 வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் அம்மாநகராட்சியில் பயன்படுத்தப்பட்டது. பட்டியல் தொகை பெறுவதற்கான பட்டியல் சமர்ப்பிக்கும் பொழுது தவறுதலாக வாகன எண் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான விளக்க கடிதம் அனுப்பியும் விசாரணை ஏதுமில்லாமல் இவரது ஒப்பந்த பதிவை மீண்டும் புதுப்பிக்க இயலாது என்பதுடன் மனுதாரரை கருப்பு ஒப்பந்தாரர் பட்டியலில் சேர்த்து உத்தரவிடப்பட்டுள்ளது. மனுதாரர் தொடர்புடைய கோப்பு துணை கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காஞ்சிபுரம் அவர்களின் விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளதால் அவை வந்த பிறகு பட்டியல் தொகை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகராட்சி தெரிவித்துள்ளது என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் கொரானா பெருந்தொற்று காலத்தில் சேகரமாகும் திடக்கழிவுகளை நகரிலிருந்து குப்பை சேகரிப்பு கிடங்கிற்கு கொண்டு செல்ல ஒப்பந்த அடிப்படையில் நான்கு சிறிய ரக வாகனங்கள், திருவாளர். SAFFARI Associates (S. கமருதீன்) என்பவருக்கு உத்திரவு அளிக்கப்பட்டதன் பேரில் நாள் ஒன்றுக்கு ரூ.2050/– என வாடகை அடிப்படையில் நான்கு வாகனங்கள் விநியோகம் செய்ய உத்தரவு அளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. வாகனம் வாடகை அடிப்படையில் விநியோகம் செய்த ஒப்பந்த நிறுவனத்தால் காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு 06.11.2020, 08.03.2021, 23.07.2021, 27.10.2021 (ம) 11.01.2022 ஆகிய தேதிகளில் பட்டியல் பெறப்பட்டு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பட்டியல் தொகை குறித்து காஞ்சிபுரம் மாநகராட்சி உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களால் ஆய்வு செய்ததில் பட்டியலில் சேர்க்கப்பட்ட இரண்டு வாகனங்களின் பதிவு எண் தவறாக இருப்பதாக குறிப்பிடப்பட்டு அதற்கான இழப்பீட்டு தொகையாக ரூ.8,85,650/– ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்றும் அல்லது வாகனத்திற்கான பதிவு புத்தகம் (RC Book), காப்பீடு விவரம் ஆகியவற்றை தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என தணிக்கை பத்தியில் சுட்டி காட்டப்பட்டது. அதன்படி காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களால் முதல் மற்றும் இறுதி அறிவிப்பு ஒப்பந்த நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது. இந்நிலையில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் ஆணையர் அவர்களின் அலுவலக குறிப்பில் வாகனம் விநியோகம் செய்த ஒப்பந்த நிறுவன உரிமையாளர் திரு.S.கமருதீன் அவர்களை காஞ்சிபுரம் மாநகராட்சி ஒப்பந்ததாரர் பதிவினை கருப்பு

ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்க்க அறிவுறுத்தியதன்பேரில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. S. கமருதீன் அவர்களை கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்த்து உத்திரவிடப்பட்டது.

திரு.S.கமருதீன் என்பவரால் காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை கண்காணிப்பாளருக்கு காஞ்சிபுரம் மாநகராட்சி தமக்கு தொகை வழங்கப்படாமல் காலம் தாழ்த்துவதை தவிர்க்கவும், தம்மை விதிகளுக்கு முரணாக கருப்பு ஒப்பந்ததாரர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது குறித்தும் மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டதாகவும், அதன்பேரில், துணை கண்காணிப்பாளர், ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை, காஞ்சிபுரம் அவர்களால் தணிக்கை தடை மற்றும் திரு. S.கமருதீன் அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து கோப்புகளையும் ஆய்வுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டதிற்கிணங்க மேற்படி நபர் சம்பந்தப்பட்ட அனைத்து கோப்புகளும் காவல் துறை துணை கண்காணிப்பாளர், ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை, காஞ்சிபுரம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் தொகை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்ட கடிதத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்க இயலாதவாறு கோப்புகள் ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை அவர்களிடம் உள்ளது. மேலும் மனுதாரரின் கோப்பினை திரும்ப பெறுவதற்கு காஞ்சிபுரம் ஆணையாளரிடம் கலந்து ஆலோசித்து, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினருக்கு உரிய கடிதம் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மனுதாரரின் கோப்பு திரும்ப பெறப்பட்டு, அக்கோப்பு பரிசீலிக்கப்பட்டு மனுதாரரின் மீது தவறு ஏதும் இல்லை என்று நிரூபணமானால் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் திரு.S.கமருதீன் என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவை தொகை தொடர்பான கோப்புகளை, காஞ்சிபுரம் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்கள் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையிடமிருந்து பெற உரிய நடவடிக்கை மேற்கொண்டு, கோப்பினை பெற்று தணிக்கை ஆய்வுக்கு உட்படுத்தி அதன் அறிக்கையின் பேரில் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை விதிமுறைகளுக்கு உட்பட்டு விரைவில் அளிக்குமாறு காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மனுதாரர் மிகவும் கடினமான கொரோனா பெருந்தொற்று காலத்தில் தன்னுடைய 4 வாகனங்களை வாடகை அடிப்படையில் காஞ்சிபுரம் மாநகராட்சியின் அனுமதியின் பேரில் இயக்கி, அதற்கான பட்டியல் சமர்ப்பித்த போது ஏற்பட்ட எழுத்தர் பிழையினால் (Clerical Error) தனக்கு கிடைக்க வேண்டிய தொகை கிடைக்காமல் சிரமத்திற்கு ஆளாகியுள்ளார் என்பது மனுதாரர் மற்றும் பிரதிவாதியின் வாக்குமூலத்தின் மூலம் தெரிய வருகிறது. எனவே, காஞ்சிபுரம் மாநகராட்சியில், இது போன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் கோப்புகளை கையாளுமாறு அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரை வழங்குமாறு காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S.கமருதீன்,
M/s Saffair Associates,
18/35 பங்காரு ஏசப்பன் தெரு,
காஞ்சிபுரம்.

(2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(4) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

11/12